# முகவுரை

உயர்நிலை 3 மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த வாய்மொழிச் சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல் என்னும் புத்தகம், மாணவர்களுக்கு எளிய முறையில் வாய்மொழி தேர்வினைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவ வேண்டும் என்னும் நோக்கத்தில் சிகரத்தால் வெளியிடப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளுக்கான (MOE) தமிழ்மொழிப் பாடத்திட்டத்தைத் தழுவி இந்தப் புத்தகம் அமைந்துள்ளது.

இந்தப் புத்தகத்தில் வாய்மொழித் தேர்வு தலைப்புக்கான 15 முக்கியத் தலைப்புகள் தொடர்பான சொல்வளங்கள், அதை எப்படி பயன்படுத்தி சிறப்பான முறையில் உத்திகளைக் கொண்டு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்னும் வழிகாட்டலோடு மாணவர்களுக்காக எளிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. தலைப்புகள் ஒட்டிய கூடுதல் தகவல்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து நிலை மாணவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் சில சொல்வளங்கள் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

வாய்மொழிச் சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல் புத்தகத்தின் வாயிலாகத் தேர்வை எதிர்நோக்கும் உயர்நிலை மாணவர்கள், முக்கியத் தலைப்புகளைக் கொண்டு உத்திகளின் வழி மாதிரி வினாக்களுக்கு உகந்த பதிலளிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். இப்புத்தகத்தைப் பயன்படுத்தி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு வேர்ட்ஸ்மித் சிகரம் வாழ்த்துகிறது!

நன்றி

பதிப்பாளர் குழு
வேர்ட்ஸ்மித் சிகரம் கல்வி நிறுவனம்

**SEC 3 - HOW TO GET FULL SCORE IN TAMIL ORAL - REVISION GUIDE**
**உயர்நிலை 3 - வாய்மொழித் தேர்வு சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல்**

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | **வாய்மொழி வழிகாட்டி** | |
| 1. | வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி | 1 - 3 |
| | **தலைப்புகள்** | |
| 1. | தமிழ்மொழியை வளர்ப்போம் (Promote Tamil Language) | 4 - 11 |
| 2. | மன உளைச்சல் (Stress) | 12 - 18 |
| 3. | தூக்கமின்மை (Insufficient Sleep) | 19 - 24 |
| 4. | இன நல்லிணக்கம் (Racial Harmony) | 25 - 32 |
| 5. | தண்ணீர் சிக்கனம் (Save Water) | 33 - 39 |
| 6. | மஞ்சள் நாடாத் திட்டம் (Yellow Ribbon Project) | 40 - 46 |
| 7. | துணைப்பாட வகுப்பு (Tuition Class) | 47 - 53 |
| 8. | மின் ஸ்கூட்டர் (E-Scooter) | 54 - 61 |
| 9. | இணையத்தில் பொருட்களை வாங்குதல் (Online Shopping) | 62 - 68 |
| 10. | சவால்களை எதிர்கொள்ளல் (Facing Challenges) | 69 - 76 |
| 11. | சிங்கப்பூரின் வளர்ச்சியில் அரசாங்கத்தின் பங்கு (Government Part In Singapore Growth) | 77 - 84 |
| 12. | சிங்கப்பூர் சுற்றுப்பயணத் துறை (Tourism In Singapore) | 85 - 92 |
| 13. | சுற்றுச்சூழல் பாதுகாப்பு (Environmental Protection) | 93 - 99 |
| 14. | தன்முனைப்பு (Self Motivation) | 100 - 107 |
| 15. | தேசிய சேவை (National Service) | 108 - 115 |
| | **விடைத்தாள்** | |
| 1. | விடைகள் | 116 - 130 |

# 1. தமிழ்மொழியை வளர்ப்போம் (Promote Tamil Language)

**<u>சொல்வளம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | இனத்தின் அடையாளம் | Identity Of Race |
| 2. | புழக்கம் | Circulation |
| 3. | தொன்மை | Antiquity |
| 4. | தகவல் பரிமாற்றம் | Information Exchange |
| 5. | இலக்கண வளம் | Grammar Resources |
| 6. | இலக்கிய மரபு | Literary Tradition |
| 7. | தாய்மொழி | Mother Tongue |
| 8. | மொழி வளம் | Language Resources |
| 9. | கருத்துப்பரிமாற்றம் | Exchange Of Ideas |
| 10. | அதிகாரப்பூர்வம் | Official |
| 11. | இருமொழித்திறன் கொண்டவர்கள் | Bilingual Speaking Person |
| 12. | பன்மொழிச் சூழல் | Multilanguage Environment |
| 13. | மொழிச் சிதைவு | Language Disintegration |
| 14. | செம்மொழி | Classical Language |
| 15. | மொழிப்பற்று | Passion In Language |






## <u>கேள்விகள்</u>

**1. தமிழ்மொழியை வளர்க்க உன் பங்கினை எவ்வாறு வெளிப்படுத்துவாய்?**

மேற்கண்ட கேள்வியில் தமிழ்மொழியை வளர்க்க நீ எவ்வாறு பாடுபட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளதால் - **சொந்தக் கருத்து / சொந்த அனுபவத்தைக்** கொண்டு கருத்துகளைக் கூற வேண்டும்.

<table>
<tr><td>Evidence / ஆதாரங்கள்<br>What? Why? How?</td><td>• நம் இனத்தவரிடம் தமிழிலேயே 1. ____________________.<br>• பிற மொழிகள் கலந்து பேசுவதைத் தவிர்ப்பேன்.<br>• வீட்டிலும் பிற மொழி கலப்பு இல்லாமல் தாய்மொழியான தமிழ் மொழியில் பேசுவேன்.<br>• சமூக ஊடகங்களில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவேன் - முகநூல், புலனம் (Whatsapp), போன்றவற்றில் தமிழ்மொழி செயலியைப் (Application) பயன்படுத்த முற்படுவேன் (Attempt).<br>• தமிழ் இதழ்களை (Magazines) வாங்குவேன் - தமிழ்மொழி இதழ்களான வானம்பாடி, சஞ்சிகைகள், நாவல்கள், நாளிதழ்கள் போன்றவற்றை வாங்கிப் படிப்பேன்.</td></tr>
<tr><td colspan="2">Consequence / விளைவுகள்</td></tr>
<tr><td rowspan="2">தமிழ்மொழியை வளர்ப்பதனால் (Advantages)</td><td>மொழியைச் சரளமாகப் பேசலாம்.<br>• தமிழ் பேசும் சமுதாயத்தினரிடையே 2. ___________________ தமிழில் பேசலாம்.<br>• அதிகமான நாளிதழ்கள், இதழ்கள் 3.____________________ போது பேச்சுத்திறன் அதிகரிக்கும்.<br>• தரமான (Quality) மொழியில் கருத்துப்பரிமாற்றம் செய்ய வழிவகுக்கும்.</td></tr>
<tr><td>தமிழ்மொழியை அழியாமல் பாதுகாக்கலாம்.<br>• தமிழ் பேசும் மக்கள் உலகளவில் உள்ளனர் - மலேசியாவில் 6 விழுக்காடு, சிங்கப்பூரில் 3 விழுக்காடு தமிழ் பேசும் மக்கள் இருக்கிறார்கள் என்பது ஆய்வின் முடிவு.<br>• இணையத்தில் தமிழ்மொழி பயன்பாடு அதிகமாகி உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகத் தெரிகிறது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>தமிழ்மொழியின் பயன்பாடு அதிகரிக்கும்.<br>• சிங்கப்பூர் தகுந்த எடுத்துக்காட்டு.<br>• தமிழ் இங்கு 4. ____________________ மொழிகளுள் ஒன்று. எனவே, அரசாங்கக் கட்டடங்கள் அனைத்திலும் தமிழ்மொழியையும் பார்க்க முடியும். பெருவிரைவுப் போக்குவரத்து இரயில் நிலையங்கள், அரசாங்கச் சேவைகள், உணவகம் போன்ற இடங்களில் தமிழ்மொழியின் பயன்பாடு அதிகரித்த வண்ணமாகத்தான் உள்ளன.</td></tr>
<tr><td>தமிழ்மொழியைப் புறக்கணித்தால் (Disadvantages)</td><td>தமிழ்மொழிச் சிதைவு ஏற்படும்.<br>• தமிழ்மொழியில் பேசுவது மங்கிப் போகும்.<br>• தமிழ்மொழியில் எழுதுவது 5. ____________________ போகும்.<br>• தமிழ் ஊடகங்களில் பிற மொழிகள் கலந்து பேசுவது 6. ____________________.<br>• ஐம்பதாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த மொழி என்ற கூற்று மறைந்துவிடும்.<br>• அடுத்த தலைமுறையினர் தம் தமிழ்மொழியின் அடையாளத்தை மறந்து விடுவார்கள்.<br>• தமிழ்மொழி தன் பொலிவை இழந்துவிடும்.</td></tr>
<tr><td colspan="2">Solution / Suggestion - How?<br>தீர்வுகள் / ஆலோசனைகள் - எவ்வாறு?</td></tr>
<tr><td colspan="2">• நம் சமுதாயத்தினர் வீட்டிலிருந்து தமிழ் பேச 7. ____________________ வேண்டும்.<br>• தமிழரைப் பார்க்கும்போது தமிழில் பேச வேண்டும்.<br>• தமிழ்மொழியைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கும் இடங்களில் தமிழை 8. ____________________ வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளிடம் தமிழில் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.<br>• தமிழைத் தாய்மொழியாகப் போற்றி அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மொழிப்பற்று அதிகரிக்கும் நிகழ்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும்.</td></tr>
</table>

(இருவழிக் கலந்துரையாடலுக்கான வினா மாணவர்கள் பேசுவதிலிருந்து கேட்கப்படும்)

**2. சற்றுமுன் நீங்கள் தமிழ் பேசும் சமூக ஊடகங்களில் தமிழ்மொழியைப் பிற மொழிகளோடு கலந்து பேசுவதைப் பற்றி கூறினீர்கள். அவ்வாறு பேசப்படும்போது உங்களுக்கு என்ன உணர்வு ஏற்படும்?**

மேற்கண்ட கேள்வியில் சமூக ஊடகங்களில் - தொலைக்காட்சி மற்றும் வானொலியில் - **தமிழ்மொழியைப் பிற மொழிகளோடு கலந்து பேசினால்** என்ன **உணர்வு** ஏற்படும் என்று கேட்கப்பட்டுள்ளதால் - மனநிலை சார்ந்த கருத்துகளைக் கூற வேண்டும்.

| | |
|---|---|
| **உணர்ச்சியின் வெளிப்பாடு (Emotion)** | அவர்கள் மீது மனக்கசப்பு ஏற்படும். தமிழ்மொழியில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் பிற மொழியைப் பயன்படுத்துவதை எண்ணி வருத்தம் கொள்வேன். |
| **ஏன்? Why?** | • நிகழ்ச்சியை வழிநடத்துபவர்கள், நிகழ்ச்சியின் அறிவிப்பாளர்கள் (Host), நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் குறிப்பிட்ட இரு மொழிகளில் புலமை (Scholar) பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழ் நிகழ்ச்சிகளை வழிநடத்தும்போது தமிழில் மட்டுமே பேச வேண்டும்.<br>• தமிழ்மொழி நிகழ்ச்சிகள் தமிழில் மட்டும்தான் நடத்தப்பட வேண்டும்.<br>• பிற மொழிகள் கலந்து பேசினால் அது நம் மொழியின் 9. ____________________ வழிவகுக்கும் என்பதை உணர்ந்தாக வேண்டும். |
| **என்ன செய்ய வேண்டும்? What Should Do?** | • சிறப்பான மொழிவளம் கொண்ட நிகழ்ச்சி படைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.<br>• மொழிக் கலப்பு கொண்ட நிகழ்வுகளுக்கு ஆதரவு நல்கக் கூடாது.<br>• நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினர்களும் முடிந்த அளவிற்குத் தமிழ்மொழியிலேயே நிகழ்வுகளைக் கொண்டு செல்லத் திட்டமிட வேண்டும். |

**3. சிங்கப்பூரில் தமிழ்மொழியை வளர்க்க அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்கள் யாவும் பயனளிக்கிறதா என்பதைப் பற்றி உன் கருத்து என்ன?**

| |
|---|
| மேற்கண்ட கேள்வியில் சிங்கப்பூர் அரசாங்கம் தமிழ்மொழியை வளர்க்க மேற்கொள்ளும் திட்டங்கள் பயனளிக்கிறதா என்று கேட்கப்பட்டுள்ளதால் - **சிங்கப்பூர் அரசாங்கம் - தமிழ்மொழி** சார்ந்த கருத்துகளைக் கூறவேண்டும். |

| **ஆம், அரசாங்கத்தின் திட்டங்கள் அருமையாக உள்ளன.** | |
|---|---|
| **Evidence / ஆதாரங்கள்**<br>**What? Why? How?** | • தமிழ்மொழியை அங்கீகார மொழியாக்கியுள்ளார்கள் - தமிழை 10. ____________________ பாதுகாக்க முயல்கிறார்கள்.<br>• தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியை 11. ____________________ எடுக்கிறார்கள் - மாணவர்கள் மொழியை மறக்காமல் இருக்க இது துணைபுரிகிறது.<br>• இந்திய மரபுடைமை நிலையம் - இந்தியர்களின் 12. ________________________ தமிழர்களின் வளர்ச்சியையும் அடையாளம் காண உதவுகிறது.<br>• ஏப்ரல் மாதத்தில் 13. ______________________ - மாணவர்கள் தங்களிடையே உள்ள திறமைகளை வெளிக்கொணர (Bring Out) முடியும் - தமிழ்மொழியில் தங்களுடைய பேச்சு, எழுத்து, வாசிப்பு போன்ற திறன்களில் மேம்பட (Improve) இவ்விழா துணை புரியும். |
| **Consequence / விளைவுகள்** | |
| **தமிழ்மொழி வளர்க்க அரசாங்கத் திட்டத்தை அமல்படுத்தியதால் (Advantage)** | • இன்றைய காலச்சூழலில் அதிகமானோர் ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.<br>• இம்மாதிரியான திட்டம் தமிழ்மொழியில் பேசவும் எழுதவும் இருப்பது மொழியை அழியாமல் பாதுகாக்கும்.<br>• தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து இருக்கும்.<br>• தமிழ்மொழியை மட்டுமல்ல இனத்தின் கலாச்சாரம், பண்பாடு நாகரிகத்தைப் (Civilization) பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.<br>• அடுத்த தலைமுறையினர் தமிழ் மொழியின் வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.<br>• சிங்கப்பூர் தமிழ்மொழிக்கு அங்கீகாரம் அளித்த நாடு என்ற சிறப்பு என்றும் நிலைத்திருக்கும். |

| | |
|---|---|
| **தமிழ்மொழி வளர்க்க அரசாங்கத் திட்டத்தை அமல்படுத்தாவிட்டால் (Disadvantage)** | • மக்களிடையே தமிழ்மொழி பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் போய்விடும்.<br>• 'மொழி இனத்தின் விழி' என்பார்கள். மொழியின் உட்பொருள் என்னவென்று அறியாமல் போய்விடுவார்கள்.<br>• மொழியை 14. ______________________ வேண்டும் என்ற எண்ணமும் தோன்றாது.<br>• அலட்சியப்போக்குடன் நடந்துகொள்வார்கள்.<br>• பிற மொழிகளுக்கு 15. ______________________ கொடுக்க வாய்ப்புண்டு.<br>• நமது வரலாறு, பாரம்பரியம் எதையுமே கற்றுக்கொள்ள முற்படமாட்டார்கள்.<br>• அறியாமையுடன் இருப்பார்கள். |

**Solution / Suggestion - How?**
**தீர்வுகள் / ஆலோசனைகள் - எவ்வாறு?**

தமிழ்மொழியை வளர்ப்பதில் ஒவ்வொருவருக்கும் கடப்பாடு உள்ளது. ஆகவே, அனைவரும் மொழியின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க வேண்டும். நம் முன்னோர்கள் கோ.சாரங்கபாணி, நாராயணப் பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளார்கள் (Working Too Hard). எனவே, நாமும் தமிழ்மொழியை வளர்ப்பதைத் தலையாயக் கடமையாக நினைக்க வேண்டும். அரசாங்கம் ஏற்பாடு செய்யும் ஒவ்வொரு திட்டங்களிலும் கலந்துகொண்டு மொழியை வளர்ப்பதில் சிட்டாய் (Fast) செயல்பட வேண்டும். எடுத்துக்காட்டாக,

- இந்திய மரபுடமை நிலையத்திற்குச் சென்று தமிழ்மொழியின் 16. __________________ பற்றி அறிய வேண்டும்.
- மாணவர்களைத் தமிழ்மொழி சார்ந்த விழாக்களிலும், 17. ______________________ பங்கு கொள்ள வைக்க வேண்டும்.
- நூலகங்களில் இருக்கும் தமிழ் புத்தகங்களை 18. ______________________ வாங்கிப் படித்துத் தமிழ் வாசிப்பை அதிகரிக்க வேண்டும்.
- அரசாங்கம் ஏற்பாடு செய்யும் தமிழ்மொழி மாநாடுகளில் கலந்துகொள்ள வேண்டும்.
- தமிழ்மொழி விழாவில் அதிக ஈடுபாட்டுடன் கலந்து கொள்ள வேண்டும்.

இது போன்ற இன்னும் பல திட்டங்களைக் குறிப்பிடலாம். தமிழ்மொழியின் சிறப்பை வருங்காலத்தினரையும் உணர வைக்கலாம். சிங்கப்பூர் தமிழர்கள் தமிழ்மொழியின் சின்னங்கள் என்று மார்தட்டிக் கூறலாம்.

**தமிழ்மொழி வளர்க்கும் இயக்கங்கள் தொடர்பான தகவல்கள்**

- தேசிய நூலக வாரியம் (National Library Board, Singapore)
- இந்திய மரபுடைமை நிலையம், சிங்கப்பூர் (Indian Heritage Centre, Singapore)
- தமிழ்மொழி ஆசிரியர் பயிற்சித் திட்டம்
  (Tamil Language Training Scheme, Singapore)
- வளர்தமிழ் இயக்கம், சிங்கப்பூர் (Tamil Language Council, Singapore)
- தேசியக் கல்விக் கழகம் (National Institution of Education)
- உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் (Umar Pulavar Tamil Language Centre)
- வசந்தம் ஒளிவழி, தமிழ்முரசு நாளிதழ், ஒலி 96.8 வானொலி நிலையம்

  (Vasantham, Tamil Murasu, Oli 96.8 FM Radio Station)
- தமிழ் மொழி விழா (Tamil Language Festival)

**வாய்மொழித் தேர்வு சிறப்புத் தேர்ச்சிக்கான செய்யுள் & பொன்மொழி பட்டியல்**

1. கற்க கசடற கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக *(திருக்குறள்)*

2. கல்விக்கழகு கசடற மொழிதல் *(வெற்றி வேற்கை)*

3. யாம் அறிந்த மொழிகளிலே, தமிழ்மொழிபோல் - இனிதாவது எங்கும் காணோம் *(பாரதியார்)*

4. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா *(பாரதியார்)*

5. தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
   தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் *(பாரதிதாசன்)*

6. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
   மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு *(பாரதிதாசன்)*

7. தமிழன் என்று சொல்லடா -
   தலை நிமிர்ந்து நில்லடா *(நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்)*

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குப் பொருத்தமான பட்டியலில் இருக்கும் செய்யுள் & பொன்மொழிகளின் எண்களை எழுதுக.**

| | |
|---|---|
| குற்றமில்லாமல் பேசுவது படிப்புக்கு அழகாகும். | |
| தேனைப்போல சுவைகொண்ட இன்பத் தமிழ்மொழியை உயிருக்கு நிகராக நினைக்க வேண்டும். | |
| தான் தமிழன் என்று சொல்வதற்கு பெருமை கொள்ள வேண்டும். | |
| நாம் கற்பதைப் பிழையில்லாமல் கற்று அதன்படி வாழ்க்கையில் நடந்துகொள்ள வேண்டும். | |
| இதுவரை எனக்குத் தெரிந்த மொழிகளில் தமிழ் போன்று இனிய மொழியை எங்கும் பார்த்ததில்லை. | |
| தமிழைப்போல நமது வாழ்க்கையும் செல்வமும் என்றும் அழியாதது என்பதை உரக்கச் சொல்வோமாக. | |

**SEC 3 - HOW TO GET FULL SCORE IN ORAL EXAM - REVISION GUIDE**
**உயர்நிலை 3 - வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டி நூல்**

# விடைகள்

## 1. தமிழ்மொழியை வளர்ப்போம்

| | | |
|---|---|---|
| 1. உரையாடுவேன் | 7. தொடங்க | 13. தமிழ்மொழி விழா |
| 2. சரளமாக | 8. பயன்படுத்த | 14. காக்க |
| 3. வாசிக்கும் | 9. சிதைவுக்கு | 15. முக்கியத்துவம் |
| 4. அதிகாரப்பூர்வ | 10. அழியாமல் | 16. சரித்திரங்களை |
| 5. மறைந்து | 11. கட்டாயப் பாடமாக | 17. போட்டிகளிலும் |
| 6. அதிகமாகும் | 12. பாரம்பரியத்தையும் | 18. இரவல் |

| | |
|---|---|
| குற்றமில்லாமல் பேசுவது படிப்புக்கு அழகாகும். | 2 |
| தேனைப்போல சுவைகொண்ட இன்பத் தமிழ்மொழியை உயிருக்கு நிகராக நினைக்க வேண்டும். | 5 |
| தான் தமிழன் என்று சொல்வதற்கு பெருமை கொள்ள வேண்டும். | 7 |
| நாம் கற்பதை பிழையில்லாமல் கற்று அதன்படி வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டும். | 1 |
| இதுவரை எனக்கு தெரிந்த மொழிகளில் தமிழ் போன்று இனிய மொழியை எங்கும் பார்த்ததில்லை. | 3 |
| தமிழைப்போல நமது வாழ்க்கையும் செல்வமும் என்றும் அழியாதது என்பதை உரக்க சொல்வோமாக. | 6 |